**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**MCOP No. 564/2022 PW1**

16.07.2025 **ம.சா.1 கண்ணன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1, 2 மனுதாரர்கள் என்னுடைய மகன் வழி பேரன் மற்றும் பேத்தி. விபத்தில் இறந்த சுதா என் மருமகள். இரு சக்கர வாகனத்தை என் மகன் ஓட்ட என் மருமகள் பின் இருக்கையில் அமர்ந்து சென்றார். 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என நிருபன வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறந்து போனவரின் வாரிசு யார் என காட்ட வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுதாரரின் வாரிசு என கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து செல்பவருக்கு உண்டான இன்சூரன்ஸ் கவரேஜ் இல்லாத காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரிதான். இழப்பீடு கோர வேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் கோர வேண்டும் என்றால் சரியல்ல. 4ம் மனுதாரர் இறந்தவரின் வாரிசாக இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. 1, 2 மனுதாரர்களுக்கு, 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் என்றும், 2ம் எதிர்மனுதாரரை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**MCOP No. 564 of 2022**
**Deposition of Witness for : PW 2**

| | | |
|---|---|---|
| Name | : | பாலமுருகன் |
| Father/Husband Name | : | கோவிந்தன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------ |
| Calling | : | |
| Religion | : | ------ |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.07.2025

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். என் தரப்பில் முதன்மை நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. அதில் இடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

விபத்தானது 16.02.2021 தேதியில் நடந்தது. இரு சக்கர வாகனத்தை சிவக்குமார் என்பவர் ஓட்டினார், வாகனத்திற்கு பின் இருக்கையில் இறந்த சுதா அமர்ந்து பயணம் செய்தார். நானும், 1ம் எதிர்மனுதாரரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் நியாபகம் இல்லை. விபத்திற்கு பிறகு நான் தான் விபத்திற்குள்ளான நபரை மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் ஏற்றி விட்டேன். விபத்து

குறித்து வெறையூர் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், கண்ணன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.